மற்ற விஷயங்களையும் ஆலோசித்துப் பார்த்து, என்ன செய்தால் இவை களையெல்லாம் தீர்க்கலாம் என்ற விஷயம் இப்பொழுது பரிசீலனையில் இருக் கிறது.

SRI S. RAMALINGAM : சர்க்கரைக்கு புதிதாக ஒரு முனையில் போட்டிருக்கக்கூடிய ஒரு அணு வரியை கொடுக்கமுடியாமல் வியாபாரி களுக்கும் பொது மக்களுக்கும் சர்க்கரை ரொம்ப கசந்துவிட்டது என்பது சர்க்காருக்கு தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சர்க்கரை எப்பொழுதுமே கசக்காதே. (சிரிப்பு.)

THE HON. SRI C. SUBRAMANIAM : சில சமயங்களில் கசக்கும் அதுபற்றி நம் புலவர்கள்கூட பாடியிருக்கிறார்கள். (சிரிப்பு.)

Illegal manufacture of crackers

* 440 *Q.*—SRI P. RANGASAMY REDDIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any Police raid was made at Tiruchirappalli on 29th October 1956 to detect cases of illegal manufacture of crackers and explosives just before Deepavali;

(*b*) whether any Policemen were seriously injured during the raid; and

(*c*) the number of cases of illegal manufacture detected during that week and the action, if any, taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) Yes, Sir. Five Police officers were injured. A Sub-Inspector and a Police constable received serious injuries and an Inspector, a Head constable and a Police constable received simple injuries.

(*c*) Three cases were detected and investigation is proceeding.

SRI P. RANGASAMY REDDIAR : இதிலே சம்பந்தப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு ஒரு கண் பாதிக்கப்பட்டு அதை அவர் உப யோகப்படுத்த முடியவில்லை. நம் நாட்டில் பல இடங்களில் இம்மாதிரி **illegal**-ஆக பட்டாசு தயாரிக்கப்படுவதை முன் எச்சரிக்கையாக தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது பெரிய அளவில் திருச்சியில் **manufacture** செய்யப்பட்டது.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுபற்றி இன்னும் புலன் விசாரணை நடந்து வருகிறது. பூரா தகவலும் எனக்கு கிடைக்கவில்லை. சச்சிதானந்தம் என்ற ஒரு சப்-இன்ஸ்பெக்டரின் கண் கெட்டுப்போய் விட்டது.

SRI K. VINAYAKAM : ஒவ்வொரு தீபாவளி விழா முடிந்த பிறகு டபாசு வெடித்து இங்கே குழந்தை இறந்தது. அங்கே ஒருவன் மடிந் தான் இங்கே ஒருவன் மடிந்தான் என்றெல்லாம் பத்திரிகையில் படிக்கிறோம். ஆண்டுதோறும் இம்மாதிரி செய்திகள் வந்துகொண் டிருக்கின்றன. டபாசு வெடி இல்லாமலே நம் மக்கள் வாழமுடியாது என்று சொல்லமுடியாது. ஆகவே, **manufacture of crackers** பூராவையும் **ban** செய்துவிட்டு இதனால் வருகிற தொல்லைகளையெல்லாம் தடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இவைகளெல்லாம் குழந்தைகள் விளையாடுவதற்காக ஏற்பட்டவை. இதிலே ரொம்பவும் அபாயகரமான வெடிகளை எதுவும் தயாரிக்கக்கூடாது என்று இப்பொழுது உத்தரவு இருக்கிறது. சாதாரணமாக எந்த விதத்திலும் தீங்கிழைக்காத வெடிகளை தயார் செய்து குழந்தைகள் விளையாடுவதை நாம் தடை செய்யவேண்டாமென்று நான் நினைக்கிறேன்.

SRI A. GOVINDASWAMY NAYAGAR : தீபாவளி சமயத்தில் நமது ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபொழுது அந்த நேரத்திலே தீபாவளி கொண்டாட்டத்திலே அவர் பட்டாசு வெடித்தாரா ?

DEPUTY SPEAKER : How is it relevant? I dissallow it.

SRI P. RANGASAMY REDDIAR : இதற்கு முன்பெல்லாம் ஓலை வெடி, யானை வெடி என்று காதிலுள்ள ஜவ்வுபிய்ந்து போகின்ற அளவிலே தயார்செய்யப்பட்டு வெடித்துவரப்பட்டது. இந்த வருஷத்தில் புது மாதிரியாக அணு குண்டு என்று ஒரு பட்டாசு தயார் செய்து அதை விற்று வருகிறார்கள். இம்மாதிரி பட்டாசுகள் வெடிக்கப்படுவதால் குழந்தைகளும் பெரியவர்களும் அநியாயமாய் மடிகிறார்கள். அதைத் தவிர இது சுகாதாரத்திற்கும் பெரிய இடைஞ்சலாகவும் மனிதர்களின் காது கொஞ்ச காலத்திற்காவது கூடிய வரையில் ரிபேர் இல்லாமல் பாதுகாக்கப் படக்கூடாத நிலைமையிலும் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் இதை கண்டிப்பாக தடுக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இங்கு போடப்பட்டிருக்கிற கேள்வி பட்டாசு வெடிப்பதைப்பற்றி அல்ல. சட்ட விரோதமாக வெடி மருந்து சாலைகளை வைத்துக்கொண்டு அதிலிருந்து வெடிகளும் மற்ற சாமான்களும் செய்வதை தடுப்பதுபற்றி தான் கேள்வி. பட்டாசு வெடித்து விபத்து ஏற்படுவதைப்பற்றி கேள்வி அல்ல.

SRI S. R. ARUMUGAM : பட்டாசை வெடித்து காசை கரியாக்கும் நிலைமையை மாற்ற பட்டாசு உற்பத்தியையே தடை செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்படியென்றால் சிகரெட் குடித்து காசை புகையாகச் செய்வதையும் கூட தடுக்கவேண்டும். இந்த விஷயங்களையெல்லாம் அவரவர்கள் இஷ்டத்துக்கு விட்டுவிடுவதுதான் நல்லது என்று நான் நினைக்கிறேன்.

Sale of crackers and colour matches

9-40 a.m. * 441 *Q.*—SRI P. RANGASAMY REDDIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the sale of crackers and colour matches has been prohibited in the Bazaar streets at Tiruchirappalli from 31st October 1956; and

(*b*) if so, the authority that issued the orders and the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sales-tax on coconut

* 442 *Q.*—SRI M. D. THIAGARAJA PILLAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether coconut has been declared as an essential article of food by the Union Government;